DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.194/2022**

**2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | வெல்டிங் |
| பெயர் | - | காட்வின் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜான்சன் | சமயம் | - | |
| கிராமம் | - | அண்ணாநகர் | வயது | - | 24 |
| சாதி | - | | | | |

**<u>15.11.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1.நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வெல்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஆனந்த் என்பவரை தெரியும். எதிரி அன்பழகனை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் அ.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 24-12-2020-ம் தேதி அசா.1 ஆனந்த் என்பவரை எதிரி அன்பழகன் என்பவர் குழந்தைகள் அ.சா.1 வீட்டின் மாடியில் விளையாடியது தொடர்பாக அவர்களுக்குள் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக எதிரி அ.சா.1னை தாயோழி கேணப்புண்டை என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையார் அடித்தார். பின்னர் அ.சா.1 போலீசாருக்கு தகவல் கொடுத்தார். 25-12-2020 -ம் தேதி காலை 11.45 மணியளவில் வால்பாறை காவல் நிலைய ஆய்வாளர் மகேஸ்வரி மற்றும் சில போலீசார் கக்கன் காலனியில் வந்தார்கள் இந்த சம்பவம் சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்யவந்ததாகவும், போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். மற்றொரு தாளில் எழுதி என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன் என்னுடன் முரளி என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவத்தின் போது நான் என்ன வேலை செய்தேன் என்றால் வால்பாறையில் கூரியரில் வேலை பார்த்தேன். கூரியரில் நான் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணிவரை வேலையில் இருப்பேன் என்றால் காலை 09.00 மணியில் இருந்து மாலை 05.30 வரை வேலையில் இருப்பேன். பார்வைமகஜரில் நான் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் சரியாக நினைவில் இல்லை. நான் பாார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். அ.சா.1 எனது அக்காவின் கணவர் என்றால் சரிதான். அ.சா.1 எனது மாமா என்பதால் சம்பவத்தை கேள்விப்பட்டு மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாகவும் போலீசார் கேட்டுக்கொண்டதன் படியும் மகஜரில் கையொப்பம் செய்து எதிரிக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

வழக்கு சம்பவத்தின் போது அ.சா.1-க்கும் எனது அக்காவிற்கும் திருமணம் ஆகியிருந்ததா என்றால் இல்லை. எனது அக்காவிற்கும் அ.சா.1 க்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் 15-10-2022-ம் தேதி திருமணம் நடைபெற்றது.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

அ.சா.1 சம்பவத்தின் போது எங்கு குடியிருந்தார் என்றால் கக்கன் காலனியில் குடியிருந்தார். வீட்டு எண் தெரு பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியவில்லை. சம்பவத்தின் போது நான் எங்கு குடியிருந்தேன் என்றால் சவராங்காடு எஸ்டேட்டில் குடியிருந்தேன். அ.சா.1 எனக்கு உறவினரா என்றால் இல்லை நானும் அவரும் ஒரே சர்ச்சுக்கு போவோம். நான் சம்பவதினத்தன்று கூரியரில் வேலை செய்துகொண்டிருந்தபோது சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதாலும் எனது மாமா என்பதாலும் எதிரிக்கு எதிராக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.